# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- கர்நாடக சங்கீதம்**

சுட்டெண்:.......................  **தரம் - 07**  **நேரம் : 01.30 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. கல்வித் தெய்வம் என்ற பாடல் எந்தக் கடவுள் மீது பாடப்படுகிறது?
1. பிள்ளையார் 2. சிவன் 3. சரஸ்வதி 4. முருகன்

2. ஸ்வரவரிசை அமைந்துள்ள இராகம் எது?
1. மாயாமாளவ கௌளை 2. மோகனம்
3. கல்யாணி 4. தோடி

3. ஔவைக்கிழவி என்ற பாடலை இயற்றியவர் யார்?
1. பாரதியார் 2. வீரமணி ஐயர்
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 4. விபுலானந்தர்

4. “மூவரென இருவரென ” என்ற தேவாரம் அமைந்த பண் எது?
1. நட்டபாடை 2. கம்பீரநாட்டை 3. நட்டராகம் 4. நாட்டை

5. ஒரு அட்சரகாலம் கொண்ட ஸ்வரம்
1. நெடில் ஸ்வரம் 2. குறில் ஸ்வரம் 3. நியாச ஸ்வரம் 4. கிரகஸ் ஸ்வரம்

6. ஸாரீகமபதாநீஸா என்பதில் வரும் நெடில் ஸ்வரங்களின் எண்ணிக்கை யாது?
1. 5 2. 3 3. 4 4. 6

7. ஸ்வரங்களின் கால அளவைக் குறிப்பது
1. நெடில் ஸ்வரம் 2. குறில் ஸ்வரம் 3.ஹ்ரஸ்வ ஸ்வரம் 4. அட்சரகாலம்

8. ஸா; என்ற கார்வையின் அட்சர காலம் யாது?
1. 2 2. 3 3. 4 4. 5

9. மாயாமாளவ கொளையின் மேள எண் யாது?
1. 10 2. 15 3. 20 4. 29

10. “தையும் பிறந்ததம்மா” எவ்வகைப் பாடல்?
1. நாட்டார் பாடல் 2. கிராமியப்பாடல்
3. நாட்டுப்புறப்பாடல் 4. மேற்கூறிய யாவும் சரி

(10X2 = 20 புள்ளிகள்)

**02. கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒன்றுக்கு மேற்பட்ட அட்சரத்தைக் கொண்டது ...................... ஆகும்
2. குறில் ஸ்வரத்தின் மறு பெயர் ................................ ஆகும்
3. ஸா ; ; என்பதன் அட்சரகாலம் .......................... ஆகும்
4. சங்கீதத்தின் மறுபெயர் ......................... ஆகும்.
5. மூவரென தேவாரத்தை ................... அருளினார்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**03. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. தீர்க்கஸ்வரம் | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 2. ஸ்ப்தஸ்வரங்கள் | ஆலயம் |
| 3. ஔவைக்கிழவி | நெடில் ஸ்வரம் |
| 4. ஸ்வரவரிசை | 7 |
| 5. பத்திபாடல் | சங்கராபரணம் |

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1. ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட செய்முறைக் கணிப்பீடு ஒன்று தருக.
2. அக் கணிப்பீட்டிற்குரிய நியதிகள் 05 தருக.
3. அக்கணிப்பீட்டினால் நீர் அடைந்த நன்மைகள் 02 தருக.
4. அக்கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் 02 தருக.

(4 x 5=20புள்ளிகள்)

**02.** 1. குறில் ஸ்வரம் என்பது யாது?
2. குறில் ஸ்வரத்தை வேறு எவ்வாறு அழைப்பார்
3. ஸட்ஜத்தை 4 அட்சரமாக எழுதிக்காட்டுக.
4. சப்த ஸ்வரங்கள் எவை?

(4 x 5=20புள்ளிகள்)

**03.** நீர் கற்ற சிறுவர் பாடல் ஒன்றினை வரிக்கிரமமாக எழுதுக.

( 20புள்ளிகள்)